ந.க.எண்.4574/2025/அ2,
நாள்:24.11.2025.

**திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு**

**ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

**ஒன்றிய தலைப்பு பதிவுரு எழுத்தர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமன**

**வேலைவாய்ப்பு அறிவிக்கை (Notification)**

திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், **ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில்** ஒன்றிய தலைப்பில் காலியாக உள்ள 01-பதிவுரு எழுத்தர் காலிப்பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து **25.11.2025 முதல் 24.12.2025 வரை** நேரடியாக மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடத்தின் பெயர், இனசுழற்சி மற்றும் ஊதிய விபரம்:**

| வ. எண் | பதவி | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | இனசுழற்சி | ஊதியம் / ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பதிவுரு எழுத்தர் | 1 | General Turn - Non-Priority | ரூ.15,900/- (15900 - 58500) |

**கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள்:**

1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2) தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு: 01.07.2025 தேதிய நிலையில் கீழ்கண்டவாறு இருக்க வேண்டும்.**

| வ. எண் | பரிவு | குறைந்தபட்ச வயதுவரம்பு | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | பொது பிரிவு | 18 | 32 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18 | 34 |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | 18 | 34 |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | 18 | 37 |
| 5. | முன்னாள் ராணுவத்தினர் | 18 | GT-50 Years & BC/MBC/SC/ST-55 Years |
| 6. | ஆதரவற்ற விதவை | 18 | நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி வயது விதித்தளர்வு வழங்கப்படும். (அரசாணை (நிலை) எண்:91, மனித வள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள்:13.09.2021-இன்படி வயது விதித்தளர்வு கடைபிடிக்கப்படும்.) |
| 7. | மாற்றுத்திறனாளிகள் | 18 | |

**மேற்கண்ட அதிகபட்ச வயது வரம்பினை கடந்தவர்கள் விண்ணப்பிக்க இயலாது.

நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. அரசு விதிகளின்படி மேற்குறிப்பிடப்பட்ட இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
4. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ரூ.70/- ஒட்டப்பட்ட அஞ்சல் உறை -1 (10**x4 Inches Postal Cover**) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 25.11.2025 முதல் 24.12.2025 வரை பிற்பகல் 5.45 மணிக்குள் ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமோ அனுப்ப வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**ஆத்தூர்-624701.**

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Interview Call letter) அனுப்பி வைக்கப்படும்.

பதிவுரு எழுத்தர் காலிப்பணியிடத்திற்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையதள **(National Career Service Portal)** **www.ncs.gov.in** மற்றும் மாவட்ட இணையதள **dindigul.nic.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

24/11/25

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**ஆத்தூர்.**

கா.வி
24.11.25